தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 15/- | மலர் 17 - இதழ் 04 - ஆகஸ்ட் 2015 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

வல்லரசு இந்தியா
வளமான தமிழகம்

அனைத்து வங்கி சேவைகளும் ஒரே இடத்தில்...
பாரதீய மகிளா வங்கி லிமிடெட்.

உங்கள் சேமிப்பிற்கு அதிக வருவாய்.

பிஎம்பி சேவிங்ஸ்
சேமிப்புக் கணக்கு

5%* p.a — ₹1 லட்சத்துக்கும் அதிகமான தொகைக்கு

4.5% p.a — ₹1 லட்சம் வரை

பிஎம்பி சேவிங்ஸ் சேமிப்புக் கணக்கு

பிஎம்பி சில்வர் சேவிங்ஸ் சேமிப்புக் கணக்கு

பிஎம்பி கோல்டு சேவிங்ஸ் சேமிப்புக் கணக்கு

*வங்கிக்கணக்கில் உள்ள மொத்த தொகைக்கும் 5%

பிஎம்பி
கோமல் கலி

உங்களின் மகளுக்கு சுதந்திரத்தின் சிறகுகளை அளித்திடுங்கள்

பெண் குழந்தைகளுக்கு சுய அதிகாரம் வழங்கும் ஒரு புதுமையான ரெக்கரிங் டெபாஸிட்

• வயது : ஒரு நாள் குழந்தை முதல் 15 வயது வரை • குறைந்தபட்ச மாதாந்திர முதலீடு ரூ. 50 அல்லது அதற்கும் அதிக தொகை, மிகச் சரியாக ரூ. 50-ன் பெருக்குத் தொகை • மாதத் தவணையை மாதத்தின் எந்த தேதியில் வேண்டுமானாலும் செலுத்தும் வசதி • காலம் : 3 ஆண்டுகள் முதல் பத்தாண்டுகள் வரை • கடன் வசதி உண்டு : மொத்த மதிப்பின் 85% (தனி நபர் விபத்து காப்பீடு) • TDS இல்லை

இணையதளம்: www.bmb.co.in • https://bmbsmartbanking.co.in/netbanking

சென்னை கிளை :
ஓவர்சீஸ் டவர்ஸ்,
756-L, அண்ணா சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி : 044-28523321
Offsite ATM: R 48G, TVS காலனி,
அண்ணா நகர், மேற்கு Extn.,
சென்னை

கோயமுத்தூர் கிளை :
தேவராஜன் சென்டர்,
ஐயப்ப பூஜா சங்கம் அருகில்,
206/1, சத்யமூர்த்தி ரோடு,
ராம்நகர், கோயமுத்தூர் - 641 009
தொலைபேசி : 0422-4373749/29

மதுரை கிளை :
மதுரை கிளை
10/386, மெயின் ரோடு,
அண்ணா நகர், மதுரை-625020
தொலைபேசி : 0452-2535570

திருச்சி கிளை :
நெ. 29 B, ரோஹன்'ஸ் ஆர்கேட்,
HP பெட்ரோல் பங்க் எதிரில்,
தில்லைநகர், மெயின் ரோடு,
திருச்சி-620 018.
தொலைபேசி : 0431-2744000

பிஎம்பி
பாரதீய மகிளா வங்கி
மகளிருக்கு சுய அதிகாரம், பாரதத்தின் சுய அதிகாரம்.
முற்றிலும் இந்திய அரசுக்குச்சொந்தமானது

BMB
BHARATIYA MAHILA BANK
Empowering Women, Empowering India.
Wholly owned by Govt. of India

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்பு தோழிகளே,

தமிழகத்தில் உள்ள சிறந்த சாலை வசதி, போக்குவரத்து வசதி, குடிநீர், தொலைத் தொடர்பு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் நல்ல முறையில் இருப்பதால், உலகில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதை விரும்புகின்றன. செப்டம்பர் மாதம் நடைபெறும் உலக அளவிலான தொழில் முனைவோர்கள் மாநாடு மேலும் முதலீடுகளை ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

வளர்ந்து வரும் தொழில் முதலீடுகளின் காரணமாக, இலகு மற்றும் கனரக வாகனங்களை இயக்குதல், கட்டுமானப் பணிகள், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், தொலைத் தொடர்பு துறை, கணினி இயக்கம், சமையல் கலை, செவிலியர் பயிற்சி, சில்லரை வணிக மேலாண்மை மற்றும் சுற்றுலா வளர்ச்சி போன்ற துறைகளில் வேலைவாய்ப்புகள் பல மடங்காக பெருகி உள்ளன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத சக்தியாக விளங்கும் இந்தியாவின் முதுகெலும்பாக உள்ள இளைஞர்களை விழிப்புணர்வு பெற்றவர்களாக மாற்றிட தமிழக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதில் குறிப்பிடத் தக்கது இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி ஆகும்.

படிக்காதவர்கள் முதல் ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு கொத்தனார் பயிற்சி, பெயிண்டிங், வெல்டிங், செயற்கை அணிகலன் தயாரித்தல் ஆகிய பயிற்சிகளும், ஐந்து முதல் எட்டாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் பழுது பார்த்தல், வீட்டு மின் வேலைகள், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், அழகு கலை ஆகிய துறைகளில் பயிற்சிகளும்,

எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படித்த இளைஞர்களுக்கு இலகு, கன ரக வாகனம் ஓட்டுதல், கணினி இயக்கம், பேக்கரி பொருட்கள் தயாரித்தல், வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது நீக்கம் செய்தல் ஆகிய துறைகளில் பயிற்சிகளும்,

பத்தாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்தவர்கள், டீ.வி., மற்றும் கணினி பழுது பார்த்தல், லேப் டெக்னீசியன், செவிலியர் பயிற்சி, கணினிப் பயிற்சி, சில்லரை விற்பனை பிரதிநிதி ஆகிய துறைகளில்பயிற்சிகளும், ஐ.டி.ஐ. படிப்பினை முடித்தவர்கள், சி.என்.சி. இயக்குதல், சி.என்.சி. ப்ரோக்கிராமிங் ஆகிய பயிற்சிகளும் பெறலாம்.

உங்கள் வீட்டில் உள்ள 18 முதல் 35 வயது வரை உள்ள தகுதி உள்ள நபர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் இலவசமாக பயிற்சி பெற தகுதி உடையவர்கள் ஆவார்கள். ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலரும் மேற்கண்ட பயிற்சிகளைப் பெறுவதற்கு அந்தந்த ஊராட்சிகளில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர்கள், அல்லது திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் ஆகியோரை அணுகி பயன் பெறலாம்.

திட்டத்தினைப் பயன்படுத்தி வெற்றி அடைய இளைஞர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

மீண்டும் சந்திப்போம்,

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 17–இதழ்–04–ஆகஸ்ட்–2015
விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
ஜா. சம்பத்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
எல். ராஜா
கூடுதல் திட்ட இயக்குநர்
ஆர். ராஜசேகர்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)
மு. செல்வம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி: 044–2817 3412 / 3413
தொலைநகல்: 044–2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

சாதனைக் கனவு...

அன்புள்ள வாசகர்களுக்கு,

நமது நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவரும், ராக்கெட் விஞ்ஞானியுமான உயர்திரு. அப்துல் கலாம் அவர்களின் மறைவிற்கு ஒட்டுமொத்த நாடே அஞ்சலி செலுத்தியது. எந்த முன்னாள் ஜனாதிபதிக்கும் இல்லாத அளவிற்கு சாதி, மதம், மொழி, கட்சி ஆகிய வேறுபாடுகள் இன்றி, ஒற்றுமையுடன் அமைதியான முறையில் கலாம் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய நிகழ்வானது இந்திய வரலாற்றில் இடம் பெற்று விட்டது.

இவ்வித சிறப்பு அஞ்சலிக்கு என்ன காரணம்? அவர் வாழ்க்கையில் கடைபிடித்த எளிமை, அவரது கருத்துக்களின் வலிமை, மாணவர்களோடு உரையாடுவதில் அவர் கொண்ட இனிமை, மனித நேயத்தின் மீது கொண்டிருந்த பற்று, இளைஞர் களுக்கு நாட்டுப்பற்றையும், தன்னம்பிக்கையையும் வளர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி, அதோடு தனது பதவி காலத்திற்கு பிறகும் இப்பணிகளைத் தொடர்ந்தது மக்களிடையே அவர் மீது மரியாதையை மேலும் உயர்த்தியது.

தான் ஒரு ஜனாதிபதியாக இருப்பதை விடவும், விஞ்ஞானியாக இருப்பதை விடவும் ஒரு ஆசிரியராக இருப்பதற்கே அதிக ஆர்வம் காட்டியவர். இதற்குக் காரணம் இந்த நாட்டை உருவாக்கக் கூடிய தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைக்கான வல்லுநர்களை ஆசிரியர்களால்தான் உருவாக்க முடியும் என்பதில் உறுதியாக இருந்தவர். தான் ஜனாதிபதி அளவிற்கு உயர்வதற்கு வழிகாட்டியாக இருந்தவர் தனது ஆசிரியர் பாதிரியார் லட்டிஸ்லாஸ் சின்னதுரை அவர்கள்தான் என திரு. கலாம் அவர்கள் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் தினம் கொண்டாடும் இந்த செப்டம்பர் மாதத்தில், ஆசிரியர்கள் தங்கள் பணியின் மகத்துவத்தை மறைந்த கலாம் அவர்களை எடுத்துக் காட்டாகக் கொண்டு, தங்களிடம் பயிலும் மாணவர்களை சரித்திரம் படைப்பவர்களாக உருவாக்கப் பாடுபட வேண்டும். இதைத்தான் 'பிறப்பு ஒரு நிகழ்வு... ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்' என திரு. கலாம் அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்.

இளைஞர்களைப் பார்த்து, 'கனவு காணுங்கள்' என்று கூறினார். கனவானது வளர்ச்சியை நோக்கிய கனவாக இருக்க வேண்டும். எவ்வித முயற்சியோ உழைப்போ இல்லாமல் வெறும் கனவு மட்டுமே காண்பது பகல் கனவாகும். இவ்வித பகல் கனவினால் எதையும் சாதிக்க முடியாது,

ஒருவரின் வெற்றிக்கு முதல் படியே வளர்ச்சிக்கான கனவு காண்பதுதான். இந்தக் கனவு வெற்றி பெற உழைப்பு, முயற்சி மற்றும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன் ஆகியவைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுவே வெற்றியின் இரகசியம். இதற்கு உதவுவதே ஆசிரியரின் பணியாக அமைய வேண்டும்.

ஆசிரியர்களுக்கு முற்றம் தனது 'ஆசிரியர் தின' நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

केनरा बैंक
(भारत सरकार का उपक्रम)
Canara Bank
(A Government of India Undertaking)
Together We Can
CANARA JEEVAN DHARA
A Special SB Account
for Senior Citizens
Free Senior Citizen ATM/Debit Card with Photo ID
Issue of name printed cheque book
Free Personal Accident Insurance coverage*
Locker facility at concessional rate*
Health Insurance - Available at concessional premium rate
*conditions apply
Toll Free: 1800 425 0018
Save Trees. Save Water. Save Environment
www.canarabank.com

உள்ளே...

தாய்ப்பாலின் மகத்துவம் 17

மேகமலை 8

முன்னாள் ஜனாதிபதி பாரத ரத்னா
டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் 10

சாதனை படைத்த பெண்களுக்கு பாராட்டு 13

69வது சுதந்திர தின விழா 18

வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் 20

புதுவாழ்வு 29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

முற்றம் இதழைத் தொடர்ந்து படித்து வருகிறேன். குழு உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறியும் வருகிறேன். இதழில் வெளியாகும் செய்திகள் யாவும் மிகவும் அருமையாகவும், படங்கள் சிறப்பாகவும் உள்ளன. தங்களின் சேவைக்கு நன்றிகள் பல.

எம். ராஜ்[6], பிரதிநிதி,
இந்தியன் மாற்றுத் திறனாளிகள் சிறப்புக் குழு,
ஆண்டரசன்பட்டி, தெத்துப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் வாழ்வாதாரம் பெற்ற ஏழை மக்களின் வெற்றிக் கதைகளையும், திட்டத்தின் செயல்பாடுகளையும் அறிந்து கொள்ள முற்றம் இதழ் எங்களுக்கு மிகவும் துணையாக உள்ளது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
தேன்கனிக் கோட்டை,
கிருஷ்ணகிரி மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத்தின் செயல்பாடுகளும், சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளும் முற்றம் இதழில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. சுகாதாரம் குறித்த படக்கதையும் நன்றாக உள்ளது. பிற குறிப்புகளும் பயனுள்ளதாக இருக்கின்றன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
தாமரை மகளிர் சுய உதவிக் குழு,
வருஷநாடு, தேனி மாவட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையை மீட்டுத் தந்து, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திகள் மிகவும் நன்றாக உள்ளன.

உறுப்பினர்கள்,
செம்மீன் சுய உதவிக் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஆசிரியர் தினம்

மனிதனை மனிதனாக உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர் சமுதாயத்தை சொல்வதுண்டு. ஆசிரியர்கள் என்றால் மாணவ சமுதாயத்தை உருவாக்குபவர்கள் அல்ல, மாறாக உயிரூட்டுபவர்கள்.

ஆசிரியராக இருந்து நம் நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்த பாரத ரத்னா டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 5ஆம் தேதியே ஆசிரியர் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

பிறபணிகளில் இல்லாதது ஆசிரியர் பணியில் இருக்கிறது. மாதா, பிதா குரு தெய்வம் என்று தான் சொல்கிறோம். மாதா பிதா டாக்டர், இன்ஜினியர் என்று நாம் சொல்வது இல்லை. தமிழ் சிறப்பாயிரம் பாடலில் சொன்னது போல் அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை உலகிற்கு தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியர் உலகத்தையே குழந்தைகளுக்குத் தருகிறார். இத்தகு சிறப்பு மிகுந்த ஆசிரியர் பெருமக்களைப் போற்றி புகழ்ந்திட இந்நாளில் உறுதியேற்போம். ■

சர்வதேச எழுத்தறிவு தினம்

யுனெஸ்கோ என்று பொதுவாக அழைக்கப்படும் ஐ. நா. கல்வி அறிவியல் கலாச்சார நிறுவனம், எழுத்தறிவின்மையை அகற்றும் பொருட்டு 1965ம் ஆண்டு செப்டம்பர் 8ம் நாள் ஈரான் நாட்டின் தலைநகர் டெக்ரானில் உலக நாடுகளின் கல்வி அமைச்சர்களின் மாநாடு ஒன்றை நடத்தியது.

எழுத்தறிவின்மையால் உலக நாடுகளில் ஏற்படும் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கப்பட்ட இம்மாநாட்டில், எழுத்தறிவின்மையை உலகிலிருந்து அறவே நீக்குவதற்காக ஆற்ற வேண்டிய பணிகள், நடைமுறைகள் ஆகியவைகளை பட்டியலிட்டு ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

எழுத்தறிவின்மையை போக்குவதற்கான மாநாடு நடைபெற்ற செப்டம்பர் 8ம் தேதியை 'சர்வதேச எழுத்தறிவு நாள்' என யுனெஸ்கோவின் 14வது பொதுக்குழு பிரகடனம் செய்தது. இதன்படி 1967ம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 8ம் நாள் சர்வதேச எழுத்தறிவு நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எழுத்தறிவின்மையை போக்க கடைபிடிக்கப்படும் இந்நாளில் கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறுகின்றன. ■

தினம்...தினம்...

உலக அமைதி நாள்

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் பிரகடனத்தின்படி ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 21ம் தேதியை உலக அமைதி நாளாக ஐக்கிய நாடுகளின் சபை உறுப்பு நாடுகளால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 1981ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதம் மூன்றாவது செவ்வாய்க்கிழமை அன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்த உலக அமைதி நாள், 2002ஆம் ஆண்டிலிருந்து செப்டம்பர் 21ஆம் தேதி அன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அமைதி என்பதற்கு பல அர்த்தங்கள் இருக்கின்றன. தற்காலத்தில் அமைதி என்பது பகை இல்லாத நிலையைக் குறிக்கிறது. சர்வதேச அளவில் போர் இல்லாத நிலையையும் குறிக்கிறது. அனைத்து பிரச்சனைகளுக்கும் அமைதியே மருந்து. மேலும் உலகின் சகல முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது சமாதானம். அனைத்து நன்மைகளுக்கும் சமாதானமே முக்கியமானதாகக் கருதப்படுகிறது

உலக சமாதான முயற்சி ஒன்றின் போது ஐ.நா.வின் பொதுச்செயலாளர் ஹாமர்சீல்ட் விமான விபத்தில் உயிர் துறந்தார். இந்த துயர சம்பவம் நிகழ்ந்தது 1961ம் ஆண்டு செப்டம்பர் மூன்றாம் வாரத்தின் செவ்வாய்க்கிழமை. இந்த தினமே உலகமே அமைதி தினமாக 2002ஆம் ஆண்டு வரை அனுசரிக்கப்பட்டு வந்தது. சமாதானமே சகவாழ்வு என்பதை இந்நாளில் நினைவில் நிறுத்துவோம். ■

மலை முழுவதும் மேகங்கள் தவழ்ந்து செல்வதால் மேகமலை எனப் பெயர் வந்திருக்கலாம்

மேகங்கள் சூழ்ந்த பசுமை நிறைந்த மேகமலைத் தொடர்

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் உள்ள இம்மலைப்பகுதியில் ஹைவேவிஸ், மணலாறு, மேல் மணலாறு, வெண்ணியாறு, மகாராஜா மெட்டு, இரவலங்கார் ஆகிய மலைக்கிராமங்கள் உள்ளன. பகல் நேர வெப்ப நிலை 12 டிகிரி செல்சியஸ் என்பதால் எப்போதும் இதமான குளிர் நிலவுகிறது. திடீரென பெய்யும் மழை, அவ்வப்போது எட்டிப் பார்க்கும் வெயில் என மாசற்ற பூமியாக மேகமலை திகழ்கிறது.

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கின் கிழக்குப் பகுதியில் உயர்ந்து நிற்கும் மேகமலைத் தொடர், ஒரு பக்கம் மேற்குத் தொடர்ச்சி மலைகளாலும், இன்னொரு பக்கம் வருஷநாடு மலைத் தொடராலும் இணைந்துள்ளது. பல்லாயிரம் ஏக்கர் பரப்பளவில் இருபக்கமும் கரைகொண்ட வாய்க்கால் போல மலைகள் உயர்ந்து நிற்க, மலைகளின் முகடுவரை பசுமை போர்த்தி நிற்கின்றன தேயிலைச் செடிகள். மலை முழுவதும் மேகங்கள் தவழ்ந்து செல்வதால் மேகமலை எனப் பெயர் வந்திருக்கலாம். திடீரென பெய்யும் மழை, அவ்வப்போது எட்டிப் பார்க்கும் வெயில் என மாசற்ற பூமியாக மேகமலை திகழ்கிறது.

சின்னமனூர் – ஹைவேவிஸ் சாலையில் 13 கி.மீ. தொலைவில் மலை அடிவாரத்தில் தென்பழனி முருகன் கோவில் உள்ளது. ஹைவேவிஸ் சாலையில் 22 கி.மீ. தொலைவில் உள்ள இடத்தில் இருந்து கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை கிராமங்கள், சின்னச் சுருளி அருவி, பள்ளத்தாக்குகள் ஆகியவற்றைக் காணலாம்.

18 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட மலைச் சாலை வழியாக செல்லும் போதே அடர்த்தியான மரங்களும், மலையில் இருந்து விழும் சிறுசிறு அருவிகளும், சாலையின் குறுக்கும் நெடுக்குமாக ஓடும் விலங்கினங்களும் மேகமலையின் வனப்பிற்கு அத்தாட்சியாக இருக்கிறது.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் உள்ள இம்மலைப்பகுதியில் ஹைவேவிஸ், மணலாறு, மேல் மணலாறு, வெண்ணியாறு, மகாராஜா மெட்டு, இரவலங்கார் ஆகிய மலைக்கிராமங்கள் உள்ளன.

மலையாறு அணை

இரண்டு மலைகளுக்கு இடையே பிரம்மாண்ட மாய் கட்டப்பட்டிருக்கிறது மலையாறு அணை. இந்த அணையில் உள்ள நீர் மிகவும் சுத்தமாக பளிங்குபோல் இருக்கிறது. விலங்குகள் அடிக்கடி இந்த அணையில் தண்ணீர் அருந்த வரும் என்பதால் கவனமாக இருக்க வேண்டும்.

மகாராஜா மெட்டு

இங்கிருந்து கம்பம் பள்ளத்தாக்கின் முழு அழகையும் ரசிக்கலாம். மேலும் முல்லைப் பெரியாறு நீர்த்தேக்கம், கண்ணகி கோவில் ஆகியவற்றையும் பார்க்கலாம். இங்கு அமைந்துள்ள மகராசியம்மன் கோவில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. மதுரையில் இருந்து கேரளத்துக்குச் செல்லும் வழியில் கண்ணகி தங்கியிருந்ததாகக் கருதப்படும் இடம் தற்போது 'கண்ணகி கோட்டம்' என்று அழைக்கப்படுகிறது. மகாராஜா மெட்டின் மேற்குப் பகுதியில்தான் 'மூல வைகை ஆறு' உருவாவதாகக் கூறப்படுகிறது.

கம்பம் பள்ளத்தாக்கு

மேகமலையில் இருந்து சிறிது தூரம் சென்றால் கம்பம் பள்ளத்தாக்கின் அழகிய தோற்றத்தினைக் காணலாம். வழியெங்கும் விழும் நீர்வீழ்ச்சிகளில்

மலை முகட்டில் இருந்து வெளியேறும் நீர், பள்ளத்தாக்கில் இருந்து மேல் நோக்கி வரும் காற்றில் சிதறடிக்கப்பட்டு மேகமாக மாறி காற்றில் மிதக்கின்றன. இதன் காரணமாக இந்த இடத்திற்கு 'தூவானம்' என்று பெயர்.

ஆனந்தமாய் குளிக்கலாம். இங்குள்ள காட்டு விலங்குகள் இடம் பெயர்ந்து பெரியார் அணைக்கட்டு மற்றும் மேகமலைப் பகுதிக்கு வந்து விடுமாம். காட்டு மாடு, மிகப் பெரிய அணில், வேணாம்பல் (ஹார்ன்பில்) என விலங்குகளின் நடமாட்டம் இங்கு அதிகம் உள்ளன.

ஹைவேவிஸ்

இங்கிருந்து மணலாறு ஏரியின் தோற்றத்தைக் கண்டு ரசிக்கலாம். மலைமுகடுகளுக்கு மத்தியில் ஹைவேவிஸ் அணை உள்ளது. இந்த அணையில் தேக்கப்படும் தண்ணீர் மேல்மணலாறு வழியாக இரவலாங்காறு அணைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இருந்து 'தூவானம்' என்று அழைக்கப்படும் இடத்திற்கு இரண்டு கி.மீ. தொலைவில் மலைமுகட்டில் உள்ள நீர்த்தேக்கத்திலிருந்து வெளியேறும் நீர் பள்ளத்தாக்கில் இருந்து மேல் நோக்கி வரும் காற்றில் சிதறடிக்கப்பட்டு மேகமாக மாறி காற்றில் மிதக்கின்றன. இதன் காரணமாக இந்த இடத்திற்கு 'தூவானம்' என்று பெயர்.

இரவலங்காறு அணை

ஹைவேவிஸ்ஸில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள இரவலங்காறு அணையில் ஆண்டு முழுவதும் தண்ணீர் தேங்கியிருக்கும். ஹைவேவிஸ், மணலாறு, வெண்ணியாறு அணையில் இருந்து இரவலங்காறு அணைக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டு, சுருளி மின் உற்பத்தித் திட்டத்திற்கு குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. இந்த அணைக்கு அருகில் உள்ள இரவலங்காறு அருவியில் ஆகஸ்ட் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை நீர் விழுகிறது. முல்லையாற்று பகுதியில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி மூலம் இந்த இடத்தின் தொன்மைச் சிறப்பு தெரிய வருகிறது. 'மதிகெட்டான் சோலை' என்று அழைக்கப்படும் வனப்பகுதியும் இங்குதான் உள்ளது.

எப்படிப் போக வேண்டும்?

பஸ்ஸில் சின்னமனூரில் இருந்து நேராகச் செல்லலாம். குறிப்பிட்ட நேரம் மட்டுமே பஸ் வசதி உண்டு. சொந்த வாகனத்தில் செல்பவர்கள் ஆண்டிப்பட்டியிலிருந்து கண்டமநாயக்கனூர் சென்று அங்கிருந்து நேராக மேகமலை செல்லலாம்.

தங்கும் வசதிகள்

ஹைவேவிஸ் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் பயணியர் விடுதி செயல்பட்டு வருகிறது. சில தனியார் ரிசார்ட்டுகளும், சிறிய உணவு விடுதிகளும் உள்ளன. நமக்குத் தேவையான உணவுகளை சின்னமனூரில் வாங்கி செல்வது நல்லது. ■

சரஸ்வதியின் சபதம்...

(நாடகம்)

சென்ற இதழ் தொடர்ச்சி...

சரஸ்வதி: இந்த ஒத்த தொழில் குழுவிற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் அப்படின்னு மூன்று பேரை தேர்ந்தெடுக்கணும். இதுல செயலாளர், பொருளாளர் கண்டிப்பா இலக்கு மக்களாகத்தான் இருக்கணும். தலைவரா யாரு வேணாலும் இருக்கலாம். இந்தக் குழுவில் உறுப்பினராகணும்னா ஒவ்வொருத்தரும் உறுப்பினர் கட்டணம் ரூ. 100/– செலுத்தணும். மேலும் மாத சந்தா குறைஞ்சது ரூ. 10/–ன்னு உறுப்பினர்கள் செலுத்தணும். அதுமட்டுமில்லாமல் ஒவ்வொரு மாதமும் மாதாந்திர கூட்டம் நடத்தணும். இந்தக் கூட்டத்திற்கானடீ,காபி,போக்குவரத்துபோன்றசெலவுகளைமாதாந்திர சந்தா தொகையிலிருந்து எடுத்து செலவு செய்து கொள்ளலாம். மேலும் பொருளாளர் மற்றும் செயலாளர் பெயரில் வங்கிக் கணக்கு துவக்கணும். இவங்க இரண்டு பேரும் சேர்ந்துதான் பண பரிவர்த்தனை செய்யலாம். இதுமாதிரி ஆரம்பிக்கிற ஒவ்வொரு குழுவிற்கும் அரசு ரூ. ஒரு இலட்சம் மானியமா தராங்க. இந்தப் பணத்தை வைச்சி மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் வழிகாட்டுதல்படி, 'ஒத்த தொழில் குழு' செய்யுற தொழிலுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். இப்படி ஏற்படுத்துற குழுக்களை வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் ஒன்று சேர்த்து ஒரு கூட்டமைப்பாக உருவாக்க அரசு பல வகையிலும் உதவ தயாரா இருக்கு. நகண்டிப்பா நாம மிக விரைவில் ஒரு பெரிய தொழில் நிறுவனத்தின் அங்கத்தினராக இருப்போம் என்ற நம்பிக்கையோடு செயல்படுவோம். வெற்றி பெறுவோம்.

வீராசாமி: நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே...

ஊராட்சி மன்றத் தலைவர்: 'ஒத்தத் தொழில் குழு' பற்றி நம்ம சரஸ்வதி மிக தெளிவா எடுத்துச் சொன்னாங்க. மிக்க நன்றி. அதோபோல நீங்க அனைவரும் தயவு செய்து 'முற்றம்' இதழை தவறாமல் படிங்க. அதுல பல நல்ல செய்திகளை நமக்காக எழுதிட்டு வராங்க. அடுத்தக் கூட்டத்தில் சந்திப்போம். நன்றி வணக்கம். ■

(கூட்டம் நிறைவுற்றது)

டாக்டர். P. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

தமிழகத்தின் மண்ணின் மைந்தர் முன்னாள் குடியரசுத் தலைவர் இந்தியாவின் ஏவுகணை நாயகர்–பாரத ரத்னா

டாக்டர் ஏ. பி. ஜே.

இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவரும், விஞ்ஞானிகளுக்கு மிகவும் உந்து சக்தியாக விளங்கியவருமான பாரத ரத்னா டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் அவர்கள் 27.07.2015 அன்று காலமானார். மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் உள்ள ஐ.ஐ.எம். நிறுவனத்தில் நடைபெற்ற நிழ்ச்சியில் கலந்து கொள்ளும் போது திடீர் மாரடைப்பு ஏற்பட்டு அன்னாரின் உயிர் பிரிந்தது.

இளமைப் பருவம்

தமிழகத்தின் ராமேஸ்வரம் நகரில் கடந்த 1931 அக்டோபர் 15ஆம் தேதி அப்துல் கலாம் பிறந்தார். இவரது தந்தையார் ஜைனுலாபுதீன், தாயார் ஆஷியம்மா. இவரின் இயற்பெயர் அவுல் பக்கீர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம் என்பதாகும்.

ராமேஸ்வரத்தில் பள்ளிக் கல்வியை முடித்த அவர், மேற்படிப்பிற்காக திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு 1954ல் இயற்பியலில் பட்டம் பெற்றார். 1955ஆம் ஆண்டு சென்னை எம்.ஐ.டி. கல்வி நிறுவனத்தில் விண்வெளி பொறியியல் படிப்பில் சேர்ந்தார். அங்கு படித்தபோது போர் விமானியாக வேண்டும் என்று கலாம் ஆசைப்பட்டார். ஆதற்கான தேர்வில் அவர் 9வது இடம் பெற்றார். ஆனாலும் விமானியாகும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அறிவியலில் சாதனை படைத்தவர்

சென்னை எம்.ஐ.டி.யில் உயர் கல்வி முடித்த கலாம் அவர்கள், 1960ஆம் ஆண்டில் மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பில் முதன்மை விஞ்ஞானியாக பணியில் சேர்ந்தார். முதலில் இந்திய ராணுவத்துக்காக சிறிய ஹெலிகாப்டரை வடிவமைத்துக் கொடுத்தார். பின்னர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் (இஸ்ரோ) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்தார். 1963 முதல் 1983 வரை சிறப்பாகப் பணியாற்றினார்.

1970 முதல் 1990 வரை பி.எஸ்.எல்.வி., எஸ்.எல்.வி. 3 திட்டங்களில் பணியாற்றினார். இந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக முடிந்தன. நாட்டின் முதல் அணு ஆயுத சோதனையாக சிரிக்கும் புத்தர் திட்டத்துக்கு டி.பி.ஆர்.எல். பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். 1970ல் எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் ரோகிணி–1 ஏவப்பட்டது இஸ்ரோவின் சாதனையாகும்.

1931-2015

அப்துல் கலாம்

ஏவுகணை நாயகன்

இந்தியாவின் ஏவுகணைகளில் முக்கியமானதாகக் கருதப்படும் அக்னி ஏவுகணையை உருவாக்கியதால் கலாம் 'ஏவுகணை தந்தை' என வர்ணிக்கப்பட்டார். விஞ்ஞானியாக இருந்து பல ஏவுகணைகள், செயற்கைக் கோள்கள், அணுசோதனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றியவர் கலாம் அவர்கள். 'இந்தியாவின் ஏவுகணை நாயகன்' என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட கலாம் அவர்கள், திரு. நரசிம்மராவ், திரு. வாஜ்பாய், திரு. தேவகவுடா ஆகியோர் பிரதமர்களாக இருந்தபோது, அவர்களின் அறிவியல் ஆலோசகராகவும் செயல்பட்டார்

மக்களின் ஜனாதிபதி

நம் நாட்டின் 11வது குடியரசு தலைவராக டாக்டர் கலாம் அவர்கள் 2002ம் ஆண்டு ஜூலை 25ம் தேதி பதவியேற்றார். நாட்டின் உயரிய விருதாகக் கருதப்படும் பாரத ரத்னா விருது பெற்ற மூன்று குடியரசு தலைவர்களில் அப்துல் கலாமும் ஒருவர். முன்னதாக டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் (1954), டாக்டர் ஜாகீர் உசேன் (1963) ஆகியோர் பாரத ரத்னா விருது பெற்றுள்ளனர். ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற முதல் அறிவியல் விஞ்ஞானியும் டாக்டர் கலாம் அவர்கள்தான்.

டாக்டர் கலாம் அவர்கள் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில், ஜனாதிபதி மாளிகையில் உள்ள மொகல் தோட்டத்தை சிறப்பாகப் பராமரிக்க ஏற்பாடு செய்தார். எஃகு கோட்டையாக இருந்த ஜனாதிபதி மாளிகையை, ஏழை எளிய மக்களின் பார்வைக்காக திறந்து விட்டவர் பிரம்மாண்டமான ஜனாதிபதி மாளிகையில் எளிமையாக வாழ்ந்தார். எளிமையும், ஆடம்பரமின்மையுமே அப்துல் கலாமின் மற்றொரு அடையாளம். 'மக்கள் ஜனாதிபதி' என அனைத்துத் தரப்பினராலும் ஏகோபித்த பாராட்டைப் பெற்றவர்.

இசைப்பிரியர்

அப்துல் கலாம் அவர்கள் சிறந்த இசைஞானி. இசையை ரசிப்பதில் மட்டுமல்ல இசைக்கருவிளை வாசிப்பதிலும் கலாம் அவர்கள் ஈடுபாடு கொண்டவர். அப்துல் கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்த வரையில், அவரது மாளிகைக்கு அதிகமாக வருகை தந்தவர்கள் தமிழர்களே எனக் கூறலாம். தமிழகத்தில் இருந்து வருகை தருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சந்திக்க மறுக்காமல் நேரம் ஒதுக்கியவர். தமிழ் மீதான ஆர்வத்தைக் காட்டும் வகையில் தமிழ்நாட்டில் இருந்து வரும் பொது விழாக்களின் அழைப்பை கலாம் அவர்கள் பெரும்பாலும் தவிர்த்ததில்லை.

அணுசக்தி விஞ்ஞானியாக இருந்தாலும் தாய் மொழியான தமிழ் மீதும், திருக்குறள் மீதும் அதீத பற்று உடையவராக இருந்தார். தான் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் எல்லாம், திருக்குறளை மேற்கோள் காட்டி பேச அவர் தவறியது இல்லை. குடியரசுத் தலைவர் மாளிகையின் வரவேற்பறையில் திருக்குறள் பெரிதாகத் தெரியும்படி டிஜிட்டல் போர்டை வைக்கச் சொன்னவர்.

இளைஞர்களை கவர்ந்தவர்

'நமது நாடு ஏழ்மையானது அல்ல. நமது எண்ணங்கள் உயர்வாக இருக்க வேண்டும். அதை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். அதன் மூலமே சாதனைகள் படைக்க முடியும். நாடு சுயசார்பு அடைய, அறிவியல் அறிஞர்களும் இளைய தலைமுறையினரும் அயராது உழைக்க வேண்டும்' என்று இளைய தலைமுறைக்கு கோரிக்கை விடுத்தவர் கலாம் அவர்கள்.

2020ல் இந்தியா வல்லரசாக வேண்டும் என்ற அவரது நீண்ட நாள் கனவை இளைய சமுதாயத்தின் கனவாக மாற்ற வேண்டும் என்ற லட்சிய நோக்குக் கொண்டவர். இந்தியா சூப்பர் பவர் நாடாக வேண்டும் என்றும், அதற்கான செயல் திட்டம் வகுக்க வேண்டும் என்பதிலும் நாட்டம் காட்டினார்.

டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாமேதை அப்துல் கலாம் அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று விருது வழங்கப்படும் என்றும், அன்னாரின் பிறந்த தினமாக அக்டோபர் 15ம் தேதியை இளைஞர் எழுச்சி நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர்கள் நலன் ஆகியவற்றிற்கு பாடுபடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும் இந்த விருதானது 8 கிராம் தங்கத்தால் ஆன பதக்கம் மற்றும் 5 இலட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை கொண்டது ஆகும்.

அதன்படி சென்னையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் 'டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம்' விருதினை இஸ்ரோ அமைப்பின் திட்ட இயக்குநர் திருமதி. என். வளர்மதி அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். ■

தொகுப்பு
ப. கலைமதி,
மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

ஊன்றுகோல்...

அன்பிற்கினியோரே...!
ஆம்... இல்லைதான்...
உங்களைப்போல்
காலோ அல்லது கையோ...
செவியோ அல்லது விழியோ
உங்களைப் போல் இல்லைதான்...!

ஆம்... முடியாதுதான்...
உங்களைப்போல்
நிற்கவோ அல்லது நடக்கவோ
கேட்கவோ அல்லது பார்க்கவோ
உங்களைப் போல் முடியாதுதான்...!

ஆம்... உண்டு,,,
உங்களை விட அதிகமாய்,
தன்னம்பிக்கையும், தன்மானமும்
விடா முயற்சியும் விழா முயற்சியும்
உங்களை விட அதிகமாய்
உண்டுதான்...!

அன்பிற்கினியோரே...!!
உதவி செய்யாவிட்டாலும்
இடையூறு செய்யாதீர்கள்...
அன்பு செய்யாவிட்டாலும்
வம்பு செய்யாதீர்கள்...
எங்கள் கைகளில்
தற்போது இருப்பது
ஊரக வறுமை ஒழிப்பு சங்கம்
என்னும் ஊன்றுகோல்...!

தமிழ்நாடு மாநில
ஊரக வாழ்வாதார இயக்கம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

சாதனைப் படைத்த பெண்களுக்குப் பாராட்டு விழா

கடலூர் மாவட்டம், மக்கள் கருத்தொளி இயக்கம் சார்பில், பல துறைகளில் சாதனை படைத்த கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்களுக்கு பாராட்டு விழா 10.08.2015 அன்று கடலூர் டவுன் ஹாலில் நடைபெற்றது.

கடலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, சாதனைப் படைத்த பெண்கள் மற்றும் ஆரோக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில் கடலூர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.■

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கான 12 நாட்கள் உண்டு உறைவிடப் பயிற்சி பட்டுக்கோட்டையில் உள்ள மண்டல ஊரக பயிற்சி நிறுவனத்தில் 27.07.2015 முதல் 08.08.2015 வரை IIBF நிறுவனம் மூலம் நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்பினை நாகை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு வங்கி தொடர்பான பணிகள் குறித்தும், வங்கிக் கடன் இணைப்பு, வசூல் முகாம், காப்பீடு மற்றும் நிதி கல்வி போன்றவை குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டன. ■

இயங்காத / செயலற்று போன மகளிர் சுய உதவிக் குழுக்களை மீட்டுயிர்ப்பித்தல்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் முதன் முதலாக நமது தமிழ்நாட்டில்தான் 1990ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் துவக்கப்பட்டு, சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

இந்த நல்ல திட்டம் 1992ம் ஆண்டில் மத்திய அரசின் வழிகாட்டுதல்படி இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் படிப்படியாகத் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 25 ஆண்டு காலத்தில் சில குழுக்கள் சரிவர இயங்காத நிலை மற்றும் செயலற்ற நிலை ஏற்பட்டுள்ளது. நமது தமிழகத்தில் சுமார் ஆறு லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. அதில் பல குழுக்கள் இயங்காத / செயலற்று போன குழுக்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அந்த செயலற்ற நிலையில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து சிறப்புடன் செயல்படுத்தும் திட்டம் தான் **'சுய உதவிக் குழு மீட்டுயிர்ப்பித்தல் திட்டம்'.**

இயங்காத (அ) செயலற்று போனதற்கான காரணங்கள்

1) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான 5 சூத்திரங்களை சரியாக கடைபிடிக்காதது

1. ஒழுக்கான / சீரான இடைவெளியில் கூட்டங்கள் போடுதல்
2. குறிப்பிட்ட தொகையை குறிப்பிட்ட இடைவெளியில் சேமித்தல்
3. சேமிப்பிலிருந்து உள்கடன் கொடுத்தல்
4. கடன்களை மீண்டும் திரும்ப பெறுதல் / வசூலித்தல்
5. கணக்கு புத்தகம், தீர்மானப் புத்தகம், பேரேடுகள் பராமரித்தல்

2) தொண்டு நிறுவனங்களின் ஆதரவு தொடராமல் போனது.

3) தனிப்பட்ட முறையில் நீடித்தத் தன்மையுடன் செயல்படுவதற்கான வலுவான அமைப்புகள் மற்றும் இலாபம் ஈட்டக் கூடிய தொழில்களை துவங்க ஏற்பாடுகள் / வழிமுறைகள் செய்யாத / இல்லாத நிலை ஏற்பட்டது.

4) கூட்டங்கள் சரிவர கூட்டப்படாததினால் சேமிப்புகள் நடைபெறாமல் போனது. மற்றும் உள்கடன்களை சரிவர வசூலிக்க முடியாமல் போனது.

5) வங்கி சேமிப்பு கணக்கு மற்றும் கடன் கணக்குகளை சரிவர பராமரிக்காமல் விட்டுப் போனது

6) சில உறுப்பினர்கள் வங்கிக் கடன்களை திரும்ப செலுத்தாமல் போனது

7) இறப்பு, கல்யாணம் போன்றவைகளால் குழு உறுப்பினர் களின் எண்ணிக்கை குறைந்து போனது

8) குழு உறுப்பினர்களுக்குள் ஒற்றுமை இல்லாமை

9) குழு தலைவர், செயலர்களின் அதிகாரப் போக்கு. மற்றும் சுழற்சி முறையில் எல்லோருக்கும் பொறுப்பாளர்கள் பதவி கொடுக்காமல் இருத்தல்.

10) நம்பிக்கை இன்மை (அ) பிறர் தூண்டுதலால் குழுவிலிருந்து பிரிந்து, புதிய குழுவை உருவாக்குவது / அதிகக் கடன் கிடைக்க புதிய குழுவில் இணைந்து கொள்வது ▪

(தொடரும்)

மாநில அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில், மாநில அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 22.07.2015 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள தொழில்துறை கூட்ட அரங்கில் நடைபெற்றது.

தமிழகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அவ்வாறு செயல்படுத்தப்படும் அனைத்துத் நலத் திட்டப் பணிகளையும் தரமானதாகவும், திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்கவும், உரிய காலக் கெடுவிற்குள் மக்கள் பயன் பெறத்தக்க வகையில் நிறைவேற்றவும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறைசார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் உள்ளிட்ட அனைத்து அறிவிப்புகளின் கீழ், அனைத்து திட்டப் பணிகளையும் விரைந்து செயல்படுத்தி, காலதாமதமின்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் திரு. ககன்தீப்சிங்பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் திரு. எஸ். நடராஜன், இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

நன்மைகள் பல தரும்

பாகற்காய் பச்சடி

தேவையான பொருட்கள்

பாகற்காய் – 100 கிராம், வெங்காயம் – 1, தக்காளி – 1, மிளகாய் தூள் – 1 தேக்கரண்டி, வெல்லம் – சிறிதளவு, மஞ்சள் தூள், உப்பு, புளித்தண்ணீர், கடுகு, கறிவேப்பிலை போன்றவை தேவைக்கேற்ற அளவு.

செய்முறை

முதலில் பாகற்காய், வெங்காயம், தக்காளி ஆகியவற்றை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு வாணலியில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி, கடுகை தாளித்து அதனுடன் கறிவேப்பிலையை சேர்க்கவும். பின்னர் நறுக்கிய வெங்காயம், தக்காளி ஆகியவற்றை சேர்த்து வதக்கவும். இத்துடன் நறுக்கிய பாகற்காயினை சேர்த்து நன்கு வதக்கியவுடன், மஞ்சள் தூள், உப்பு மற்றும் மிளகாய்த் தூள் ஆகியவற்றை சேர்த்து நன்கு வதக்கவும். பின்னர் சிறிதளவு தண்ணீர் சேர்த்து வேக வைக்கவும். காய் நன்கு வெந்தவுடன் புளி தண்ணீரை சேர்க்கவும். நீர் வற்றியவுடன் சிறிதளவு வெல்லம் சேர்த்து சுருண்டு வரும் பதத்தில் இறக்கவும். இனிப்பு, காரம், புளிப்பு என அனைத்து சுவைகளும் கலந்து இருக்கும் இந்த பாகற்காய் பச்சடி உடல் நலத்திற்கு மிகவும் சிறந்தது. ■

– சசிகலா ராஜமன்னார், மேற்கு மாம்பலம், சென்னை.

தாய்ப்பால் மட்டுமே குடிக்கும் குழந்தைக்கு வளர்ந்ததும் சர்க்கரை நோய், உடல் பருமன், இதய நோய் போன்றவை ஏற்படுவதில்லை.

தாய்ப்பாலின் மகத்துவம்

குழந்தை பிறந்த முதல் இரண்டு நாட்களில் தாய்க்கு சுரக்கும் சிம்பால் கொழுப்பு, புரதம், விட்டமின் சத்துக்களுடன், நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்டது. குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுப்பது நல்லது.

தாய்ப்பால் மட்டுமே குடிக்கும் குழந்தைக்கு வயிற்றுப் போக்கு, சளி, நோய்த் தொற்று போன்றவை ஏற்படாது.

சரியான முறையில் தாய்ப்பால் கொடுக்கும் தாய்க்கு மார்பகப் புற்றுநோய், சினைப்பை புற்றுநோய், மனச்சோர்வு, அதிக உடல் எடை போன்றவை வராமல் இருப்பதுடன், தாய்க்கும் சேய்க்கும் இடையில் பிணைப்பு அதிகமாகும்.

அமர்ந்த நிலையிலோ அல்லது சாய்ந்தவாக்கில் படுத்த நிலையிலோ தாய்ப்பால் கொடுக்கலாம். குழந்தை பிறந்த ஒரு மாதம் வரை ஒரு நாளைக்கு 6 முதல் 8 முறை சிறுநீர் கழித்தால் மட்டுமே குழந்தை சரியான முறையில் பசியாறுகிறது எனக் கொள்ளலாம்.

குழந்தை பிறந்த முதல் ஆறு மாதங்கள் தாய்ப்பால் தருவதே குழந்தைக்கு ஆரோக்கியமான வளர்ச்சி தரும். புட்டியில் பால் கொடுப்பது நோய்த் தொற்றை உருவாக்கும் என்பதால் தவிர்க்க வேண்டும்.

பால் கொடுக்கும் தாய்மார்கள் அதிக அளவில் பால் சுரக்க பிஞ்சுக் காய்களை சாப்பிட வேண்டும்.

இதயக் கோளாறு நீக்கும்

வெள்ளைப் பூண்டு

பழங்காலம் முதல் சமையலில் முக்கிய இடம் பெற்று வரும் வெள்ளைப் பூண்டுக்கு மருத்துவ குணங்கள் அதிகம் உண்டு. பக்கவாதம், வயிற்று வலி போன்றவற்றுக்கு பூண்டு சிறப்பான மருந்தாகும். மார்புச் சளியைக் கரைப்பதோடு, கபத்தை இளக்கி தூக்கத்தை தரக் கூடியது. செரிமானத்தையும் சீர்படுத்தக்கூடியது. சளித்தொல்லை உள்ளவர்கள் 10, 15 பூண்டுப்பற்களை உரித்து, 50 மில்லி பாலுடன் அதே அளவு தண்ணீர் சேர்த்து, நன்றாக வேகவைத்து, பாதியாக வற்றியதும் ஒரு சிட்டிகை மஞ்சள் தூள், மிளகுப் பொடி சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கி நன்றாகக் கடைய வேண்டும். பிறகு தேவையான அளவு பனங்கற்கண்டு சேர்த்து இரவு தூங்கப் போவதற்கு முன் அருந்தினால், மூக்கடைப்பு, மார்புச் சளி, கபம் போன்றவை குணமாகும்.

வாய்வுக் கோளாறினால் சிலருக்கு முதுகுப் பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, கை கால் வீக்கம் போன்றவை ஏற்படக் கூடும். அப்போது வெள்ளைப் பூண்டை நெருப்பில் சுட்டு தோலை உரித்து சாப்பிட்டு வந்தால் மேற்கண்ட பிரச்சனைகள் தீரும். பூண்டினை ரசம், குழம்பு போன்றவை வைத்து சாப்பிடலாம். இதயக் கோளாறு, இரத்த அழுத்தம் உள்ளவர்களும், இரத்தக் குழாயில் கொழுப்பு படிந்திருப்பவர்களும் வெள்ளைப் பூண்டினை வேக வைத்து சாப்பிடுவதால் நாளடைவில் நோய்கள் கட்டுக்குள் வரும். இவை தவிர பூண்டுச் சாறுடன் தண்ணீர் கலந்து கிருமி தாக்கிய புண்களை துடைத்து வந்தால், புண்களில் வலி குறைந்து, சீழ் பிடிப்பது குறைந்து நாளடைவில் புண் ஆறும்.

கூந்தல் அழகு

தினமும் சிகை அலங்காரம் செய்யும் போது பெண்கள் முடி இழப்பு பிரச்சனையை சந்திக்கிறார்கள். சிலருக்கு முடி அடர்த்தி இல்லாமல் இருக்கும். அதை கவனிக்காமல் விட்டு விட்டால் நாளடைவில் முடி அதிகம் கொட்ட ஆரம்பிக்கும்.

பொதுவாக முடி இழப்பு பிரச்சினையை சந்திப்பவர்கள் நெல்லிக்காயை சாறு எடுத்தோ அல்லது நெல்லிக்காய் பொடியை எலுமிச்சை சாற்றில் கலந்தோ முடியில் தேய்த்து வர முடி உதிர்வு பிரச்சனைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதுபோல் வெங்காயத்தை சாறு எடுத்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து வாரம் ஒரு முறை தலையில் தேய்த்து மசாஜ் செய்து குளித்து வந்தால் முடி உதிர்வது குறையும்.

மருதாணி பொடியை மாதம் ஒருமுறை தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் முடியின் அடர்த்தி அதிகரிக்கும். முட்டையின் வெள்ளைக் கருவுடன் ஒரு டீஸ்பூன் ஆலிவ் எண்ணெய் கலந்து பேஸ்ட் போல் செய்து, தலைமுடியில் தடவி 20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் அலசி வர முடி வளர்ச்சி பெறும்.

– பேச்சியம்மாள், துர்க்கா நகர், தாம்பரம், சென்னை

இயற்கைப் பொருட்களால் கிடைக்கும் அழகு நிரந்தமாக இருக்கும். செயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தினால் பாதிப்புகள் ஏற்படுவதுடன் பணமும் செலவாகும். எனவே இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி, உடல் நலத்தையும், பணத்தையும் பாதுகாத்துக் கொள்வோம். இயற்கை நமது உடல் நலத்தைக் காக்கும் வகையில் பல்வேறு போருட்களையும் வழங்கியுள்ளது.

நலம்

அகத்திக் கீரை, அகத்திப்பூ ஆகியவற்றின் சாறுடன் சிறிதளவு தேன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் அடிக்கடி ஏற்படும் இருமல், தும்மல் போன்றவை நீங்கும்.

சாம்பார் பொடி தயாரிக்கும் போது ஒரு துண்டு சுக்கையும் தட்டிப் போட்டு அரைத்தால், பருப்பினால் உண்டாகும் வாயுத் தொல்லை இருக்காது.

ஜவ்வரிசியை சாதம் போல் வேக வைத்து, மோரில் கரைத்து, உப்பு சேர்த்து சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு, வயிற்று வலி போன்றவை தீரும்.

வெயில் காலத்தில் சர்க்கரைக்குப் பதில் வெல்லம் சேர்த்துக் கொண்டால், உடல் சூடு குறைந்து, உடலுக்கு இரும்புச் சத்தும் கூடும்.

அரை டீஸ்பூன் மிளகுப் பொடி, அதே அளவு கல் உப்பு இரண்டையும் எடுத்து அரை டீஸ்பூன் இஞ்சி சாறுடன் கலந்து 3 மணி நேரத்திற்கு ஒருமுறை குடித்து வந்தால் மூச்சு விடுவதில் ஏற்படும் சிரமம் குறையும்.

வெள்ளை எள்ளை சிறிது வறுத்து பொடித்து தேங்காய் சாதத்துடன் கலந்தால், சாதம் மணமாகவும், கூடுதல் சுவையாகவும் இருக்கும்.

கல்லீரல் புற்று நோயை கட்டுப்படுத்தும் ஆற்றல் குங்குமப்பூவுக்கு உண்டு என்று ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குங்குமப்பூவை கருவுற்ற பெண்கள் 5ம் மாதம் முதல் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால், தாயின் ரத்தம் சுத்தமாவதுடன், குழந்தைக்குத் தேவையான சத்துகளும் கிடைக்கும். ■

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' இதழ் விளங்கி வருவது உங்கள் அனைவருக்கும் தெரியும். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 150/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 300/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 450/–

விளம்பரக் கட்டணங்கள் விபரம்

அட்டையில்	ரூ. 45,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 37,500/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 30,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 30,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 30,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' என்ற பெயரில், சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும்.

வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

69வது சுதந்திர தின விழா

சென்னை கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி விருது வழங்கினர்

நம் நாட்டின் 69வது சுதந்திர தின விழா நாடு முழுவதும் வெகு விமரிசையாகவும், உற்சாகமாகவும் கொண்டாடப்பட்டது. சென்னை தலைமைச்செயலகத்தில்அமைந்துள்ளபுனிதஜார்ஜ்கோட்டைமுகப்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விழாப் பேருரை நிகழ்த்தினார்கள். முன்னதாக முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, திறந்த ஜீப்பில் சென்று அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டார்கள்.

பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாற்றுத் திறனாளி குழந்தைகள் அமர்ந்திருந்த பகுதிக்கே சென்று, அன்போடும் பரிவோடும் அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி, சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

இவ்விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வீரதீர செயல் புரிந்தோர் மற்றும் பல்வேறு துறைகளில் சிறந்த சேவை புரிந்தோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் மறைவின் போது அறிவித்த, ‘டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம்’ விருதினை இஸ்ரோ அமைப்பின் திட்ட இயக்குநர் திருமதி. என். வளர்மதி அவர்களுக்கு வழங்கினார்கள். மேலும் துணிவு மற்றும் சாகச செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருது ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஜோதிமணிக்கு வழங்கப்பட்டது.

தமிழகத்தில் அம்மா உணவகங்களை சிறப்புற செயல்படுத்தி வரும், மாண்புமிகு நகர்ப்புற மேம்பாடு, ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி, நகராட்சி மேம்பாடு, ஊரக வளர்ச்சி மற்றும் நலத்திட்ட உதவிகள் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கே. பனீந்திர ரெட்டி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., ஆகியோருக்கு தமிழக முதலமைச்சரின் சிறந்த செயல்பாடுகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

பொதுச் சேவை மையங்களை சிறப்புற செயல் படுத்தி வரும் தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பத் துறை, அரசு கேபிள் டி.வி. நிறுவனம், தமிழ் நாடு இ.கவர்னன்ஸ் முகமை ஆகியவற்றிற்கும் விருதுகள் வழங்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை செய்ததற்கான விருது, சென்னையைச் சேர்ந்த மருத்துவர் எஸ். சம்பத் குமாருக்கும், சிறந்த சமூக சேவகருக்கான விருது சென்னையைச் சேர்ந்த திரு. பி. சிம்மசந்திரனுக்கும், சிறந்த நிறுவனத்திற்கான விருது திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படும் சமூக மாற்றம் மற்றும் மேம்பாடு அமைப்பு மற்றும் மேல்மருவத்தூரில் உள்ள சிறப்பு சிறார்கள் மையம் ஆகியவற்றிற்கும், அதிக அளவில் வேலை வாய்ப்புகளை வழங்கிய காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் பிளக்ஸ்ட்ரானிக் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டது.

மேலும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு சிறந்த வங்கிக்கான விருதும், மகளிர் நலனுக்காக சிறந்த சேவையாற்றிய நிறுவனம் மற்றும் சிறந்த பணியாளர் விருது, தஞ்சை மாவட்டம், திருவையாறு தாலுகா, தில்லைஸ்தானம் கடுவெளியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆதரவற்றோர் இல்லத்திற்கும், நாமக்கல் மாவட்டம், போத்தனூர் ஊரக வளர்ச்சிகான மகளிர் மையத்திற்கும் வழங்கப்பட்டது.

சிறந்த மாநகராட்சியாக மதுரை மாநகராட்சியும், சிறந்த நகராட்சிகளாக புதுக்கோட்டை, மன்னார்குடி மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் ஆகிய நகராட்சிகளும், சிறந்த பேரூராட்சிகளாக தரங்கம்பாடி, திருவையாறு மற்றும் சிறுகமணி ஆகிய பேரூராட்சிகளும் தேர்வு செய்யப்பட்டு, அவைகளுக்கு பரிசு காசோலைகளும், விருதுகளும் வழங்கப்பட்டன.

தலைமைச் செயலக கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், நாடாளுமன்ற மக்களவை துணைத்தலைவர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை நீதிமன்ற நீதியரசர்கள், பாராளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்கள், அரசு உயர் அதிகாரிகள், சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் ஏராளமான பொதுக்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாற்றுத் திறனாளி குழந்தைகள் அமர்ந்திருந்த பகுதிக்கே சென்று, அன்போடும் பரிவோடும் அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி, சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

குழந்தைகளுக்கு தாய்மார்கள் பாலூட்ட தனி அறைகள்

பேருந்து நிலையங்களில் காத்திருக்கும் வேளைகளில் அன்னையர் தங்கள் குழந்தைகளுக்கு எவ்வித இடையூறுமின்றி தனிமையில் வசதியாக பாலூட்டும் வகையில் அரசு பேருந்து முனையங்கள், நகராட்சி மற்றும் நகர பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்து பணிமனைகளுடன் கூடிய பேருந்து நிலையங்கள் ஆகியவற்றில் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தனி அறைகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.07.2015 அன்று அறிவித்திருந்தார்கள்.

இதன்படி சென்னை கோயம்பேடு உட்பட 352 இடங்களில் குடிநீர் வசதி, இருக்கை வசதி, கைகழுவும் வசதி உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.08.2015 அன்று காணொளி காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

கிருஷ்ணகிரி

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகள் பார்வையிடல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், பர்கூர், காவேரிப்பட்டிணம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஒன்றியங்களில் 102 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிராம ஊராட்சிகளில் உள்ள இளைஞர்கள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்று வருகின்றனர். இந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களைப் பார்வையிட்டு, அவைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள்.

அப்பல்லோ கணினி மையத்தில் நடைபெறும் Tally பயிற்சி, திம்மாபுரம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஆவத்துவாடி கிராமத்தில் செயல்படும் மறுமலர்ச்சி கீற்று பின்னுதல் (CLG) ஒத்த தொழில் குழு ஆகியவற்றினை பார்வையிட்ட முதன்மை செயல் அலுவலர் அவர்கள், மேற்படி அமைப்புகளின் செயல்பாடுகளை பார்வையிட்டு, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின் போது கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. கோ. இராமையா, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■

திருவண்ணாமலை

வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை கூடுதல் இயக்குநர் திருமதி. எம். மாதவி மற்றும் இயக்கத்தின் உயர் அலுவலர்கள் 03.08.2015 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். ஆரணி ஒன்றியத்தில் உள்ள ச.வி.நகரம் மற்றும் சித்தேரி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை பார்வையிட்டு, அவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்த கூடுதல் இயக்குர் மற்றும் உயர் அலுவலர்கள் மேலும் சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினர். இந்த ஆய்வின் போது, திருவண்ணாமலை மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். தனபதி, மாநில வல்லுநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர் ■

கரூர்

மதி அங்காடி – அம்மா சிமெண்ட் விற்பனை துவக்க விழா

கரூர் மாவட்டத்தில், மகளிர் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக, கரூர் அரசு கலைக் கல்லூரி முன்பு 'மதி அங்காடி' 16.07.2015 அன்று மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த அங்காடியில் சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் தரமான பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதேபோல் கரூர், தாந்தோணிமலையில் உள்ள மாவட்ட வணிக வளாகத்தில் எம். பஞ்சமாதேவி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில் 'அம்மா சிமெண்ட் விற்பனையை' மாவட்ட ஆட்சியர் அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் (பொ), உதவி இயக்குனர் (தணிக்கை), வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி

சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின்படி 20 குடும்பங்களுக்கு பெரியகுளம் TRCES பயிற்சி மையத்தில் கணினி பயிற்சி மற்றும் சின்னமனூர் காயத்ரிதேவி பெண்கள் தொழில் பள்ளியில் தையல் பயிற்சியினையும் 16.07.2015 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் குறித்தும் விளக்க உரையாற்றினார். தேனி மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கோவை

கல்லூரி சந்தை

கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கோவை காருண்யா பல்கலைக் கழகத்தில் சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரி சந்தையினை, கோவை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் மற்றும் காருண்யா பல்கலைக் கழக பதிவாளர் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் காருண்யா பல்கலைக் கழக பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

22.07.2015 முதல் 24.07.2015 வரை நடைபெற்ற இச்சந்தையில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர்.

புதுக்கோட்டை

தொழில் பயிற்சிகள் துவக்க விழா

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு வழங்கப்படும் தொழில் பயிற்சிகள் தொடக்க விழா 01.07.2015 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு. சு. கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதாரத் திட்ட இயக்குநர் திரு. க. இளங்கோ, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. வி. வசுமதி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விருதுநகர்

கல்லூரிச் சந்தை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், விருதுநகர் வே. வ. வன்னிய பெருமாள் பெண்கள் கல்லூரியில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தை 04.08.2015 முதல் 06.08.2015 வரை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. வே. இராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் கல்லூரிச் சந்தையினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பா. விஜயலட்சுமி, கல்லூரி தலைவர், செயலாளர், முதல்வர், உதவித் திட்ட அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.


ஆனந்தம்
தன் வீட்டில் கழிப்பறை கட்டப் போவதைப்பற்றி மிகவும் பெருமைப்பட்டான் ஆனந்தசாமி.
என்ன ஆனந்தா, கட்டுமான வேலையெல்லாம் நடக்குதா?
ஆமா! நடந்துட்டிருக்குண்ணே.
இன்னும் ஒருவாரத்துல முடிஞ்சிடும்.
ஆனந்தசாமி கழிப்பறை கட்டும் விசயத்தை , தான் வேலை செய்யும் டவுன் சூப்பர் மார்க்கெட் வரை எல்லோரிடமும் சொல்லிவிட்டான்
பணத்துக்கு எப்படி ஏற்பாடு பண்ணின ஆனந்தா?
அது ஒண்ணும் பிரச்சினையில்ல அண்ணாச்சி.. வறுமைக்கோட்டுக்குக் கீழ உள்ளவங்களுக்கு அரசு மானியம் கிடைக்கும்.
ஏன் ஆனந்தசாமி, எங்களுக்கெல்லாம் மானியம் கிடைக்காதா?
கவலைப்படாதீங்க...
உங்கள மாதிரி பெண் தலைமையுள்ள குடும்பத்துக்கும் அரசு மானியம் உண்டு.
மாலையில் ஊருக்குத் திரும்பும்போது, பேருந்திலும் இதே பேச்சு தொடர்ந்தது.
கழிப்பறையெல்லாம் எதுக்கு தம்பி... திறந்தவெளியில போறது மாதிரி இருக்குமா?!

அப்படிச் சொல்லாதீங்க. திறந்தவெளியில போறதாலத்தான் கண்ட கண்ட நோய் பரவுது.
பணம் வேணுமில்ல.. யாரு தருவா?
அரசு மானியம் பற்றியும், அதன்மூலம் தன் வீட்டில் கழிப்பறை கட்டுவதையும் விவரிக்கிறான் ஆனந்தசாமி.
நீங்க சொல்றதைப் பார்த்தா, ரொம்ப சுலபமா இருக்கே! நீங்க கட்டறதப் பார்க்கணும்போல இருக்கே!
தாராளமா.. ரோட்டை ஒட்டித்தான் என் வீடு. ஒரு நிமிஷம் பஸ்ஸை நிறுத்தினீங்கன்னா எல்லாருமே பார்த்துப்பீங்க.
நிறுத்திடுவோம்.
அவ்வாறே நடத்துனர் பேருந்தை நிறுத்த,ஆனந்தசாமி வீட்டுக் கழிப்பறைக் கட்டுமானத்தை அனைவரும் பார்த்தனர்.
ரொம்ப நன்றிங்க. உங்களால இந்த முக்கியமான விசயத்த நாங்க எல்லாருமே தெரிஞ்சிக்கிட்டோம். வரட்டுமா!
நானும் என் வீட்டுக்குக் கழிப்பறை கட்டப் போறேன் பாருங்க.
உற்சாகமாய்க் கிளம்பியது பேருந்து.
இனி ஆனந்தம் ஆனந்தசாமிக்கு மட்டுமல்ல... அனைவருக்கும்தான்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

மக்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றம் செய்யும் திட்ட நடைமுறைகள் பற்றியும் விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

மேலும் ஆறு மாவட்டங்களில் செயலாக்கம்

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் 2008ம் ஆண்டிலிருந்து திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சிறப்பாக செயல்படுவதை அறிந்த பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியகம் இத்திட்டத்தினை விடுபட்ட தமிழக கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் விரிவாக்க திட்டமிட்டுள்ளது.

திட்ட செயலாக்க வழிமுறைகளை முடிவு செய்ய பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தில் இருந்து வருகை புரிந்த மூன்று பேர் கொண்ட குழுவுடன், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூன்று அலுவலர்கள் அடங்கிய குழுவும் இணைந்து, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை பார்வையிட்டது.

இக்குழுவினர், அம்மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள், மகளிர் திட்ட இயக்குநர்கள், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை துறைகளின் இணை இயக்குநர்கள், மீன்வளத் துறை உதவி இயக்குநர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளை 20.07.2015 முதல் 23.07.2015 வரை சந்தித்து கலந்துரையாடினர். மேலும் அந்தந்த மாவட்டங்களில் தற்போதைய வாழ்வாதார சூழ்நிலைகள் மற்றும் வள ஆதாரங்கள் பற்றியும், அதனடிப்படையில் மக்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றம் செய்யும் திட்ட நடைமுறைகள் பற்றியும் விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது.

இத்திட்டச் செயலாக்க வரைவினை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம்கபூர், இ.ஆ.ப., அவர்களிடமும், ஊரக வளர்ச்சித் துறை செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களிடமும் விரிவாக எடுத்துரைத்து, அவர்களுடைய ஆலோசனைகளின்படி விரிவாக்க திட்ட வரைவு முடிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதன் அறிக்கையை பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் குழு மற்றும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் இயக்குநர் திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் ஆகியோர் புதுடெல்லியில் மத்திய அரசின் நிதித்துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு செய்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ■

கடலோர கிராமங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் உட்பட பல்வேறு தொழில்களை மேற்கொண்டுள்ள தொழிலாளர்களிடமும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. **விக்ரம் கபூர்**, இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்
திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் புதிய மீன் விற்பனைச் சங்கங்கள்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தென்னிந்திய மீனவ சங்க சம்மேளனத்தின் உதவியுடன் திட்டம் செயல்பட்டு வரும் மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஏற்கனவே 50 மீனவ விற்பனை சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு மிக சிறப்பாக செயல்பாட்டில் உள்ளன.

இதனைத் தொடர்ந்து 2015–16ம் ஆண்டில், கடலூர் மாவட்டத்தில் ஒரு மீனவ விற்பனை சங்கமும், விழுப்புரம் மாவட்டத்தில் ஐந்து மீனவ விற்பனை சங்கங்களும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நான்கு மீனவ சங்கங்களும் ஆக மொத்தம் 10 மீனவ விற்பனைச் சங்கங்கள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன.

இச்சங்கங்களை ஒருங்கிணைத்து விழுப்புரம் மாவட்டத்தில் புதியதொரு மீனவ கூட்டமைப்பு சங்கங்களின் சம்மேளனம் ஏற்படுத்த, 25.07.2015 அன்று தென்னிந்திய மீனவ சங்க (SIFFS) முதன்மை நிர்வாகியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவைகளுக்கான சேவைக் கட்டணம், கடன் மீட்புத் தொகை, உள் கட்டமைப்பு வசதிகள், மூலதனத் தொகை, மீனவப் பெண்களின் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மற்றும் பயிற்சி போன்ற பல்வேறு இனங்களுக்கு

ரூபாய் 476 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. இந்த கூடுதல் 10 மீனவ விற்பனை சங்கங்கள் செயல்படுத்தப்பட்ட பின் மேலும் 400 மீனவர் குடும்பங்கள் பயன் பெறும் என்பதில் ஐயமில்லை. ■

இச்சங்கங்களை ஒருங்கிணைத்து விழுப்புரம் மாவட்டத்தில் புதியதொரு மீனவ கூட்டமைப்பு சங்கங்களின் சம்மேளனம் ஏற்படுத்த, 25.07.2015 அன்று தென்னிந்திய மீனவ சங்க (SIFFS) முதன்மை நிர்வாகியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஓட்டுநர் பயிற்சி மூலம் பெற்ற வாழ்வாதாரம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் திட்டப் பகுதிகளில் வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர் களுக்கு அவர்களின் கல்வித் தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டு, வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்று வாழ்வாதாரம் அடைந்த பயனாளி திரு. கோதண்டராமன் தன் அனுபவத்தை கூறும்போது, 'நான் நாகப்பட்டினம் மாவட்டம், காவேரிப்பூம்பட்டினம் ஊராட்சியில் வசித்து வருகிறேன்.

எனது குடும்பம் மிகவும் ஏழ்மையானது. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்கொண்டு படிக்க இயலாத காரணத்தினால் கூலி வேலை செய்து வந்தேன். அப்போது சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதை அறிந்து, நாகப்பட்டினம் மாவட்ட செயலாக்க அலுவலகத்தை அணுகி மயிலாடுதுறையில் உள்ள ஜெயலட்சுமி ஓட்டுநர் பயிற்சி பள்ளி மூலமாக 45 நாட்கள் ஓட்டுநர் பயிற்சி பெற்ற பின் ஓட்டுநர் உரிமமும் பெற்றேன்.

தற்போது காவிரிப்பூம்பட்டினத்தில் TATA ACE வண்டி ஓட்டி, மாதம் ரூ. 10,000/– வரை வருவாய் பெறுகிறேன்.

மேலும் சொந்தமாக TATA ACE வண்டி வாங்க வங்கி கடனுக்கு விண்ணப்பித்துள்ளேன். 10ம் வகுப்பு மட்டும் படித்து விட்டு, வாழ வழியின்றி இருந்த எனக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து, என் குடும்பத்தின் வறுமையை போக்கிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

– கோதண்டராமன்

கடலூர் மாவட்டத்தில்

அரையாண்டுக் கருத்துப் பட்டறைகள்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் 2015–16ம் ஆண்டு முதல் அரையாண்டுத் திட்டமிடல் கருத்துப் பட்டறை 10 ஊராட்சிகளில் நடத்தி முடிக்கப்பட்டது.

திட்டம் தொடக்கம் முதல் இதுவரை செயல்படுத்தப்பட்ட திட்டங்களையும், அடுத்து வரும் அரையாண்டிற்கு நிலைத்த வாழ்வாதாரத்திற்கு தேவையான திட்டங்களை வகுத்தல் போன்றவற்றை பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இதுவரை நடைபெற்ற திட்டங்கள், பயிற்சிகள், திட்டக்கூறு உட்கூறு வாரியாக தெளிவாக விவாதிக்கப்பட்டது.

கருத்துப் பட்டறையில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள், தேவைகள், கருத்துக்கள் ஊராட்சி வாரியாகத் தொகுக்கப்பட்டு, திட்ட மேலாண்மை அலகிற்கு ஆவணப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டது. மேலும் ஊராட்சி அளவிலான பிரச்சினைகளுக்கு மாவட்ட செயலாக்க அலுவலர்களால் நேரடி தீர்வு காண வழிவகை செய்யப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும், அரையாண்டிற்கு ஒருமுறை இந்த கருத்துப் பட்டறை நடத்தப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், திட்டத்தின் மூலமாகக் கடன் பெற்று தொழில் நடத்தும் பயனாளிகள், தொழில் துவங்க ஆர்வமுள்ளவர்கள், வங்கியாளர்கள், மீன் வளத்துறை, வேளாண்மைத் துறை அலுவலர்கள், சட்டத்துறையின் தொண்டு நிறுவனங்கள் ஆகியோர்களும் இந்த அரையாண்டு கருத்துப் பட்டறையில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். மேலும் இந்தக் கருத்துப் பட்டறை மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று அனைத்துப் பயனாளிகளும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் ஏற்படுத்தப்படும் குறுந்தொழில்கள்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கூட்டமைப்பில் இணைந்துள்ள குழு சார்ந்த 5 உறுப்பினர்கள் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, வருமானம் ஈட்டக் கூடிய தொழில் சார்ந்த பயிற்சியை அளித்து, அதன் மூலம் தொடர்ந்து தொழில் செய்ய ஆர்வமுள்ள பயனாளிகளை ஒன்றிணைத்து கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் குறுந்தொழில்களை செய்து வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் போன்ற குறுந்தொழில்கள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கீழ் புத்துப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து மஞ்சக் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. கலைச்செல்வி, திருமதி. கோட்டீஸ்வரி, திருமதி. வசந்தா, திருமதி. மல்லிகா மற்றும் திருமதி சந்திரா ஆகிய ஐந்து பயனாளிகள் இணைந்து, 14.05.2015 அன்று நிலா கறவை மாடு வளர்ப்பு குறுந்தொழில் துவங்கினர். இவர்களின் பங்குத் தொகை ரூ. 22,800/–, திட்ட நிதி ரூ. 1,14,000/– மற்றும் நாபின்ஸ் நிறுவனக் கடன் ரூ. 3,19,200/– என மொத்த கடன் மதிப்பு ரூ. 4,56,000/– ஆகும்.

தற்போது இவர்கள் தினசரி சராசரியாக 54 லிட்டர் பால் விற்பனை செய்கின்றனர். கடனை முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர். இதுநாள் வரை கூலித் தொழில் செய்து வந்தவர்கள் தற்போது முதலாளிகளாக உயர்ந்துள்ளனர்.

இந்த அரிய வாய்ப்பை அளித்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நிலா கறவை மாடு வளர்ப்பு குறுந்தொழிலின் உரிமையாளர்கள் மனமார நன்றி கூறுகின்றனர்.

ஒத்தத் தொழில் குழுவின் மூலம் மேம்பாடு அடைந்தவர்களின் வெற்றிக் கதை

காய்கறி உற்பத்தியில்

கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர். அதன் ஒருபகுதியாக செயல்பட்டு வரும் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு உதவிகளும் செய்யப்படுகின்றன.

தற்போது திட்ட உதவியுடன் வெள்ளரி, கீரைகள், வாழை, புடலை, கத்தரி, வெண்டை போன்ற காய்கறி செடிகள் பயிரிட்டு வளர்த்து தொழிலை கூட்டாக செய்து வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம், மிடாலம் கூட்டு வள மையத்திற்குட்பட்ட மிடாலம் ஊராட்சியில் வசித்து வரும் திருமதி. ஏஞ்சல் ராணி, திருமதி. ராஜம், திருமதி. சுகந்தி, திருமதி. மரியதங்கம், திருமதி. கலாராணி ஆகியோர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளனர். சுய தொழில் செய்து வாழ்வில் முன்னேற போதிய பண வசதி இல்லாமல் இருந்த அவர்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் நாபின்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் தொழில் தொடங்க கடன் கொடுப்பதை அறிந்த அவர்கள் உடனடியாக கூட்டு வள மைய பணியாளர்களை தொடர்பு கொண்டு, தொழில் துவங்க விருப்பம் தெரிவித்தனர். அதன் அடிப்படையில் ஐந்து பேரும் கூட்டு பொறுப்பு குழுவாக (JLC) இணைந்து காய்கறி பயிரிடும் தொழில் செய்ய திட்டமிட்டனர்.

காய்கறி செடிகள் பயிரிட அவர்களிடம் ஏற்கனவே சொந்தமான 50 சென்ட் நிலம் இருந்தது. அத்துடன் அருகிலுள்ள 20 சென்ட் நிலத்தினை ரூ. 10,000/–க்கு குத்தகை ஒப்பந்தம் செய்து காய்கறி உற்பத்தி செய்ய திட்டமிட்டனர். அதற்கான திட்டம் தயார் செய்து நாபின்ஸ் நிறுவனம் மூலம் ரூ. 1,99,500/–ம், திட்ட நிதியாக ரூ. 71,250/–ம், தங்களுடைய பங்குத் தொகையாக ரூ. 14,250/–ம் சேர்த்து மொத்தம் ரூ. 2,85,000/– மதிப்பீட்டில் இத்தொழிலை ஆரம்பித்தனர்.

தற்பொழுது ஜுலை 2015ல் ரூ. 43,000/–க்கு காய்கறிகள் விற்பனை செய்துள்ளனர். அதில் கடன் திரும்ப செலுத்தியது மற்றும் இதர செலவுகள் மேற்கொண்டது போக ரூ. 25,000/– இலாபம் இம்மாதத்தில் கிடைத்துள்ளது.

தற்போது அவர்கள் திட்ட உதவியுடன் வெள்ளரி, கீரைகள், வாழை, புடலை, கத்தரி, வெண்டை போன்ற காய்கறி செடிகள் பயிரிட்டு வளர்த்து தொழிலை கூட்டாக செய்து வருகின்றனர். ‘இப்போது இத்திட்டத்தின்மூலம்கிடைக்கப்பெற்றநிதிதங்களுக்கு பெரும் உதவியாக இருந்தது என்றும், பின் நாட்களில் இந்த தொழிலை மேலும் விரிவடைவதற்கு நாங்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்’ என்றும் தெரிவித்தார்கள்.

மேலும் எங்களுடைய தொழிலில் கிடைத்த வெற்றியானது தொழிலாளர் நிறைந்த எங்கள் கிராமத்தில் பல சுய தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு உதவியான இருக்கும் என்றும், நமது சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் அதற்கு பெரும் உதவியாக இருக்கும் என்றும் பயனாளிகள் மகிழ்ச்சியுடன் உறுதிபடவும் தெரிவித்தனர்.

இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற நிதி தங்களுக்கு பெரும் உதவியாக இருந்தது என்றும், பின் நாட்களில் இந்த தொழிலை மேலும் விரிவடைவதற்கு நாங்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம் என்கிறார்கள்,

மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சி

அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி நாட்டின் பல்வேறு மாநிலங்களில் ஆண்டுதோறும் நடைபெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள்.

அதன்படி ஒரிஸ்ஸா மாநிலம், புவனேஸ்வர் மாவட்டத்தில் உள்ள உலகப் புகழ் பெற்ற பூரி ஸ்ரீ ஜெகந்நாதர் ஆலயத்தின் தேர் திருவிழாவினை முன்னிட்டு, 'மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சி' 17.07.2015 முதல் 29.07.2015 வரை நடைபெற்றது. இதில் ஒரிஸ்ஸா, மகாராஷ்ட்ரா, அஸ்ஸாம், டில்லி, குஜராத், பாண்டிச்சேரி, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். தமிழ்நாட்டின் சார்பில், திருவண்ணாமலை, கோயமுத்தூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களான, கவரிங் நகைகள், கைவினைப் பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், பாசி மணி மாலைகள், துணி வகைகள், சணல் பைகள், தேன் மற்றும் முந்திரிப் பருப்புகள் ஆகியவற்றை விற்பனை செய்தனர்.

சென்னையில் அகில இந்திய அளவிலான சாராஸ் கண்காட்சி

நாடு தழுவிய அளவில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை கண்காட்சியான 'சாராஸ் கண்காட்சி' தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் 2015 செப்டம்பர் மாதம் நடைபெற உள்ளது. நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான உற்பத்திப் பொருட்களையும் வாங்குவதற்கான அரிய வாய்ப்பாக நடைபெறும் இக்கண்காட்சியில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களும் கலந்து கொண்டு தங்களின் பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய உள்ளனர்.

நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்தவும், அனைத்துத் தரப்பினரிடையேயும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை பிரபலப்படுத்தவும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் 'மகளிர் மேளா – நவராத்திரி விற்பனைக் கண்காட்சி' ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டும் நவராத்திரி திருவிழாவினை முன்னிட்டு 2015 அக்டோபர் 1ம் தேதி முதல் நவம்பர் 1ம் தேதி வரை 'நவராத்திரி விற்பனைக் கண்காட்சி' நடைபெற உள்ளது. சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்க ஒரு நல்வாய்ப்பாக நடைபெறும் இக்கண்காட்சிக்கு அனைவரும் வருகை தர அன்புடன் அழைக்கிறோம்.

ஈரோடு

வேலைவாய்ப்பு முகாம்

ஈரோடு மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு பல்வேறு முன்னணி நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 07.08.2015 அன்று ஈரோடு சூர்யா பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட மகளிர் திட்டம், ஈரோடு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம், ஈரோடு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் ஈரோடு சூர்யா பொறியியல் கல்லூரி ஆகியவை இணைந்து இந்த வேலைவாய்ப்பு முகாமினை நடத்தின. 31 முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்ட இம்முகாமில் 309 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

திருச்சி

பணி நியமன ஆணைகள்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. எம். மாதவி அவர்கள், திருச்சி மாவட்டத்தில் 27.07.2015 மற்றும் 28.07.2015 ஆகிய தேதிகளில் திருச்சி மாவட்டத்தில் மகளிர் திட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்தார். மணப்பாறை மற்றும் வையம்பட்டி பகுதிகளில் திறன் வளர்ப்புப் பயிற்சி பெற்று வரும் இளைஞர்களுடன் கலந்துரையாடிய கூடுதல் இயக்குனர் அவர்கள் 52 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார். பின்னர் அந்த நல்லூர் ஊராட்சியில் நடைபெறும் சமூகத் தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சியை பார்வையிட்டதுடன், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், கூட்டமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகளையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது திருச்சி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.ஆர். கோமகன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

புதுவாழ்வு திட்டம்

வறுமை ஒழிப்புத் திட்டமான

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில் 13.08.2015 அன்று நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக சுதந்திர தினத்தன்று 26 மாவட்டங்களில் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும், இவ்வாண்டு இறுதிக்குள் 12,000 பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும் அனைத்து கிராமங்களிலும் வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உதவியுடன் 5.27 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகளை இவ்வாண்டு இறுதிக்குள் கட்டிடவும், 4,174 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிலும் கணினிகளைப் பயன்படுத்தி பொது இ–சேவை மையங்கள் முழுமையாக செயல்படச் செய்யவும் தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்திட வேண்டும் எனவும், புதுவாழ்வு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் 2015 டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்திட வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், புதுவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், உதவித் திட்ட இயக்குநர்கள் திரு. எல். ராஜா, திரு. ஆர். ராஜசேகர் மற்றும் அனைத்து மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர்கள், புதுவாழ்வு திட்டத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவனங்கள் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை மாநில புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநர் திருமதி வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் ஒருபகுதியாக குன்றத்தூர் பகுதியில் சி.எஸ்.சி. கம்ப்யூட்டர் நிறுவனத்தினை பார்வையிட்ட திட்ட இயக்குநர் அவர்கள் அங்கு பயிற்சி பெறும் இளைஞர்களிடம் பயிற்சி குறித்து கலந்துரையாடினார்.

பின்னர் செரப்பனஞ்சேரியில் உள்ள இந்துஸ்தான் இன்ஜினியரிங் தொழில்நுட்ப கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகன பழுது நீக்கும் தொழில் நுட்ப பயிற்சியினை முடித்த இளைஞர்களிடம் கலந்துரையாடினார். இந்த ஆய்வின் போது, காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

கூட்டமைப்புகள் மற்றும் குழுக்களுக்கு கடனுதவி

சிவகங்கை மாவட்டத்திற்கு 18.07.2015 அன்று வருகை தந்த புதுவாழ்வு திட்ட மாநில திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் திறன் வளர்ப்புப் பயிற்சி பெறும் இளைஞர்களை சந்தித்து பயிற்சி குறித்த விபரங்களை கேட்டறிந்தார். பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஏழை பெண்களை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பப் பெண்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு, அங்கு வந்திருந்த பெண்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் திருமதி. மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பாச்சேத்தி களப்பகுதியில் உள்ள கல்லூரணி கிராம வறுமை ஒழிப்பு சங்க அலுவலகத்தை பார்வையிட்டு, ஒத்தத் தொழில் குழுக்கள், கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு கடனுதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் போது, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. வெ. அசோக்குமார் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். ■

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் குன்றத்தூர், மதுராந்தகம், அச்சிறுபாக்கம் மற்றும் உத்திரமேரூர் ஆகிய நான்கு ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட வேலை உத்தரவு பெற்ற 1005 பயனாளிகளுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு தலா ரூ. 5,000/– வீதம் ரூ. 50.25 இலட்சம் நிதி உதவியினை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் வே. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட கூடுதல் இயக்குநர் திருமதி. ஜி. முத்துமீனாள், காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் மற்றும் திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 11.08.2015 அன்று மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. எம். ரவிக்குமார், இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. வி. மார்க்கண்டேயன் அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சண்முகநாதன் அவர்களும், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சுய உதவிக் குழு ஆகியவற்றினைச் சேர்ந்த 600 நபர்களுக்கு ரூ. 3.91 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் திருமதி. அந்தோணி கிரேஸ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு. ராஜகோபால், புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். கர்ணன் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

புதுவாழ்வு பொது இ-சேவை மையங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் 156 ஊராட்சிகளிலும் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் தமிழக அரசின் மின் ஆளுமை சேவைகளை வழங்கக் கூடிய பொது இ-சேவை மையங்களாக செயல்பட உள்ளன. வருவாய்த்துறை மூலம் வழங்கப்படும் சான்றிதழ்கள், சமூக நலத்துறையினரால் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் போன்றவைகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க ஏதுவாக இந்த மையங்களில் கணினி மற்றும் இணையதள வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. மேலும் பேருந்து, இரயில் மற்றும் விமான பயணச் சீட்டுகள் முன்பதிவு செய்யும் வசதி, மின் சேவைக் கட்டணம், மொபைல் ரீசார்ஜ் செய்யும் வசதி, ஆதார், வாக்காளர் அட்டை மற்றும் பான் கார்டு போன்ற பல சேவைகளை பெறும் வசதிகளும் செய்யப்பட உள்ளது.

இ-சேவை மையங்களின் செயல்பாடுகள் குறித்து, புதுவாழ்வு திட்டப் பணியாளர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்க கணக்காளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி, சங்கரன்கோவில் பாட்டத்தூரில் உள்ள பயிற்சி மையத்தில் நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில். உதவித் திட்ட மேலாளர்கள் பிரபாகர், குமரேசன், சதியம்மாள், இளங்கோவன், ஆண்டனி ரமேஷ் மற்றும் 156 ஊராட்சிகளின் கணக்காளர்கள் கலந்து கொண்டனர். ■

போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வேளாண் கருவிகள் வழங்கும் விழா

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 26.07.2015 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அயோத்தியாப்பட்டிணம், ஆலடிப்பட்டி கிராம பழங்குடியின மக்களின் உற்பத்திப் பொருட்களை கொண்டு செல்ல ஏதுவாக, ரூ. 13.26 இலட்சம் மதிப்பிலான இரண்டு போக்குவரத்து வாகனங்களையும், கருமந்துறை கிராம பழங்குடியின மக்களின் விவசாயப் பயன்பாட்டிற்கு புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் இளையராமர் ஒருங்கிணைந்த மகளிர் விவசாய மேம்பாடு மற்றும் சந்தை வாய்ப்பு கூட்டமைப்பின் பயன்பாட்டிற்கு ரூ.13.62 இலட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளையும் மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை, சிறு துறைமுகங்கள் மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

நாமக்கல் மாவட்டத்தில்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு கடனுதவி

புதுவாழ்வு திட்டம் சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தொழில் மையம், புதுவாழ்வு திட்டம் மற்றும் பள்ளிக் கல்வித்துறை ஆகியவற்றின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 26.07.2015 அன்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் திரு. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. ஆர். சுந்தரம், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக தொழில்துறை அமைச்சர் திரு. தங்கமணி அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்ட தொழில் மையம் சார்பில் ரூ. 31 இலட்சத்து 90 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், பள்ளிக் கல்வித்துறை சார்பில் ரூ. 8 இலட்சம் மதிப்பில் மாவட்டத்தில் உள்ள 100 அரசு பள்ளிகளின் நூலகங்களுக்கு பொது அறிவு புத்தகங்களும் வழங்கப்பட்டது. மேலும் புதுவாழ்வு திட்டம் சார்பில் எலச்சிப்பாளையம்,எருமபட்டி, நாமகிரிப்பேட்டை மற்றும் கொல்லிமலை ஆகிய வட்டாரங்களில் உள்ள 22 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு அமுதசுரபி நிதி மற்றும் வாழ்வாதார தொழில் நிதியாக மொத்தம் ரூ. 1 கோடியே 5 இலட்சம் மதிப்பிலான காசோலைகளும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்லி அலுவலர் திரு. கோபிதாஸ், துணை இயக்குநர் (சுகாதாரம்) டாக்டர். ஜெமினி, மாவட்ட தொழில்மைய மேலாளர் திரு. ராஜு, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தேவகுமார், உதவி இயக்குநர் (சுகாதாரம்) திரு. நக்கீரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

வேலூர் மாவட்டத்தில் மகளிர் ஒருங்கிணைந்த இயற்கை வேளாண் கூட்டமைப்பு

வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டு தலுடன், மகளிர் ஒருங்கிணைந்த இயற்கை வேளாண் கூட்டமைப்பு குடியாத்தம், ஆலங்காயம் மற்றும் புதூர் நாடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பின் ஓர் அங்கமான முக்குன்றம் கிராம இளைஞர்கள் வேளாண் எந்திரமயமாக்கல் சங்கத்திற்கு ரூபாய் 11 இலட்சம் பெறுமான முள்ள விவசாய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 3 பவர் டில்லர், 21 விசை தெளிப்பான்கள் ஆகியவற்றை இயற்கைவேளாண் கூட்டமைப்பிற்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் முனைவர் இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். கே. சம்பத்குமார், வேளாண்மை ஆலோசகர் திரு. சம்பத், பால்வள ஆலோசகர் டாக்டர் தியாகேசன், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. சுபாஷ் சந்திரன், திரு. வில்லியம்ஸ் மற்றும் குடியாத்தம் களப்பகுதி அணித் தலைவர்கள் கலந்து கொண்டனர். ■

புதுவாழ்வுத் திட்டம் சார்பில்

கால்நடைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள்

விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஒன்றியம் ஆயர்தர்மம் ஊராட்சியில் 14.07.2015 அன்று புதுவாழ்வு திட்டம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகியவற்றின் சார்பில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில், ஆயர்தர்மம், சுரைக்காபட்டி, தைலாபுரம், இலந்தைக்குளம் உட்பட பல்வேறு கிராமங்களில் இருந்தும் அழைத்து வரப்பட்ட கால்நடைகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் திரு. சுகுமாரன், விருதுநகர் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சண்முகராஜ், கால்நடைத்துறை பல்கலைக்கழக மருத்துவர் சீனிவாசன், கால்நடை துறை மருத்துவர் ராஜராஜேஸ்வரி, புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. பிரேம்குமார், கால்நடை ஆலோசகர் திரு செல்லப்பா மற்றும் புதுவாழ்வு திட்ட களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டம்

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகியவற்றின் சார்பில் 14.07.2015 அன்று நடைபெற்ற சிறப்பு இலவச கால்நடை மருத்துவ முகாமில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர், கோவைக் கோட்ட உதவி இயக்குநர், நோய் புலனாய்வு பிரிவு டாக்டர் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் ஆகியோர் கால்நடைகளுக்கு சினைப் பரிசோதனை, குடற்புழு நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், தடுப்பூசி போடுதல் போன்ற சிகிச்சைகளை அளித்தனர்.

இம்முகாமில் கோவை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பிலிப்ஸ் இளையராஜா, பால்வள ஆலோசகர் டாக்டர் ம. இளஞ்செழியன், உதவித் திட்ட மேலாளர்கள் களப்பகுதி அணித்தலைவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மகமை உறுப்பினர்கள், மாடு வளர்ப்பு பூச்சரத்தின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கல்லூரிச் சந்தை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தையினை மாவட்ட ஆட்சியர் திரு. த. பொ. ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் முனைவர் கோ. இராமையா, புதுவாழ்வு திட்ட மேலாளர், கல்லூரி முதல்வர், உதவித் திட்ட அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், கல்லூரி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். 04.08.2015 முதல் 06.08.2015 வரை நடைபெற்ற இக்கண்காட்சியில் 17 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை 1,01,545/– ரூபாய்க்கு விற்பனை செய்தனர். ■

புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 215 மாற்றுத் திறனாளிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர்.

பாராஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில்

சாதனை படைத்த மாற்றுத் திறனாளிகள்

தமிழ்நாடு மாநில மாற்றுத் திறனாளிகள் நீச்சல் சங்கம் சார்பில் 2013ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கான நீச்சல் போட்டிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் சார்பில் மாற்றுத் திறனாளிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டு ஆண்டுதோறும் சாதனைகள் படைத்து வருகின்றனர்.

தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் நீச்சல் சங்கத்தின் சார்பில் 3வது மாநில பாராஒலிம்பிக் நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் கடந்த ஜுலை மாதம் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சென்னை வேளச்சேரியில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் குளத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் தமிழகத்தின் 24 மாவட்டங்களில் இருந்து 243 மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டனர். இவர்களில் 17 மாவட்டங்களைச் சேர்ந்த 215 மாற்றுத் திறனாளிகள் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் கலந்து கொண்டனர்.

மாநில புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின்படி, கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். இராஜா அவர்களின் வழிநடத்துதலில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் மாற்றுத் திறனாளி வீரர்களுக்கு நீச்சல் பயிற்சி வழங்கப்பட்டதுடன், மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வசதிகளும் அவர்களுக்கு செய்து தரப்பட்டன. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் சீரிய வழிகாட்டுதல்படி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர்களின் நேரடி கண்காணிப்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இப்போட்டியில் ஆண், பெண், சிறியவர் மற்றும் பெரியவர்கள் கலந்து கொண்டனர். 5 வகையான நீச்சல் போட்டிகளில் 15 பிரிவுகளாக நடைபெற்ற இப் போட்டிகளில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளி வீரர்கள், 79 தங்கம், 44 வெள்ளி மற்றும் 18 வெண்கலம் என மொத்தம் 141 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்தப் போட்டிகளில் 178 புள்ளிகள் பெற்று சென்னை முதலிடத்தையும், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் 154 மற்றும் 92 புள்ளிகள் பெற்று முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

இப்போட்டிகளில் திண்டுக்கல் மாவட்டம், நிலக் கோட்டை ஒன்றியம், ராமசெட்டிப்பட்டி கிராமத்தை சேர்ந்த செல்வன். சுரேஷ் (வயது 16) 4 தங்கப் பதக்கங்களையும், புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், களபம் ஊராட்சியைச் சேர்ந்த செல்வி. ரம்யா (வயது 17) இரண்டு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் வென்று சாதனை புரிந்துள்ளனர். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (63,100 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

தாய் மண்ணே வணக்கம்
Saluting the spirit of our motherland
இனிமையான சுதந்திர தின வாழ்த்துகள்
இனிமையான இந்தியன் வங்கி தின வாழ்த்துகள்
HAPPY INDEPENDENCE DAY!
HAPPY INDIAN BANK DAY!
Corporate office :
254-260, Avvai Shanmugam Salai
Royapettah, Chennai 600 014.
Email : indmail@indianbank.co.in
Toll Free No: 1800 425 00 000
Visit us at : www.indianbank.in
இந்தியன் வங்கி
इंडियन बैंक
Indian Bank
உங்கள் வங்கி • आपका अपना बैंक • YOUR OWN BANK

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication 20.08.2015

திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கம் அற்ற நிலையை நோக்கி..... தமிழகம்

தனிநபர் இல்லக் கழிப்பறை திட்டம்

கிராம சபை கூட்டத்தில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவது குறித்து தீர்மானம் நிறைவேற்றுதல்.

கழிப்பறை அவசியம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம்


கழிப்பறை அவசியம் மற்றும் அரசு மானியம் குறித்து இல்லந்தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

தனிநபர் இல்லக் கழிப்பறை விண்ணப்பம் கிடைக்கும் இடங்கள்.



தனிநபர் இல்லக் கழிப்பறை வேண்டி விண்ணப்பித்தல்.


விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து ஊராட்சித் தலைவர் பணி உத்தரவு வழங்குதல்.


பணி ஆரம்பிக்கும் முன் இடத்தினை குறியீடு செய்தல். (Marking of the Site).

தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு முன்பு பயனாளியுடன் புகைப்படம் எடுத்தல்.


தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணி நடைபெறுதல்.


அடித்தளம் முடித்த பிறகு முதல் தவணை விடுவிக்க அளவீடு செய்தல்.


இரண்டு உறிஞ்சிக் குழியுடன் முடிக்கப்பட்ட பணியை அளவீடு செய்தல்


தனிநபர் இல்லக் கழிப்பறை பணி முடிக்கப்பட்ட பின் பயனாளியுடன் இரண்டாவது புகைப்படம் எடுத்தல்.


தனிநபர் இல்லக் கழிப்பறை – இறுதி தவணை விடுவித்தல்.


கழிப்பறை கட்டி முடித்து ஆறுமாதம் மற்றும் ஒரு ஆண்டு முடிவில், ஊக்கத்தொகையின் முதல் மற்றும் இரண்டாம் தவணையை விடுவிக்க வட்டார அளவிலான குழு ஆய்வு செய்தல்.

திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற நிலையை அடைந்த கிராம ஊராட்சி.

சிறப்பாக பணியாற்றிய கிராம ஊராட்சி தலைவர் மற்றும் களப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசு வழங்குதல்.

பொது சுகாதாரம் காத்திடுவோம்!
தூய்மையான தமிழகம் படைத்திடுவோம்!!